ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

T.16538

கும்பகோணம்

சேஷம்மாளால்

இயற்றப்பட்ட

த்ருவ சரித்திரக்

கீர்த்தனை



T016538
Sarasvati Mahal Library. Thanjavur

கும்பகோணம்-புஸ்தகஷாப் காயன விகடகேசரி என்னும்

கே. வீ. கதிர்வேல்பிள்ளை அவர்களால் பார்வையிட்டு

பெ. ஆறுமுக முதலியாரால்

சென்னை:

மூரஹரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை) 1922. (அணா 6

ஸ்ரீராமஜெயம்.

நூதன புத்தகங்கள்.

ஜெயங்கொண்ட சோழபுரம், வா. கிருஷ்ணசாமிகோனர் இயற்றிய

ஸ்ரீமகாபாரதம். ஆதிபர்வம், சபாபர்வம் அடங்கிய முதற்பாகம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு. 40-சயிட்டுள்ளது	0	4	0
ஸ்ரீமத் ராமாயணம் பாதுகா பட்டாபிஷேகம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 40-சயிட்டுள்ள புஸ்தகம்	0	4	0
ஸ்ரீமகாபாரதம் திரௌபதை வஸ்திராபஹாரணம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு	0	2	0
நற்குலசேகரி என்னும் நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு இவை டிராமா கம்பெனி ஆக்டர்கள் முற்றிலும் அதிலுள்ளபாடல்களை உபயோகிக்குமாறு பல வர்ணமெட்டுகளுடன் கூடியது முதற்பாகம்	0	2	0
ஷை நல்லதங்காள் சரித்திரம் இரண்டாம்பாகம்	0	2	0
அல்லி அர்ஜுனா திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு, இவை டிராமா கம்பெனி ஆக்டர்கள் முற்றிலும் இதிலுள்ள பாடல்களை உபயோகிக்குமாறு பல வர்னமெட்டுகளுடன் கூடியது முதற்பாகம்	0	2	0
மேற்படி அல்லி அர்ஜுனா இரண்டாம்பாகம்	0	2	0
கோவிலன்சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு இவை டிராமா கம்பெனி ஆகடர்கள் முற்றிலும் இதிலுள்ள பாடல்களை உபயோகிக்குமாறு பல வர்னமெட்டுகளுடன் கூடியது முதற்பாகம்	0	2	0
மேற்படி இரண்டாம்பாகம்	0	2	0

திருசிரபுரம், கோவிந்ததாஸ் அவர்களியற்றிய

ஸ்ரீராமாயண பக்திரஸக் கீர்த்தனங்கள் நூதன இந்துஸ்தான், பாரீஸ், தில்லானா, டோமரி அடங்கியது	0	5	0

கும்பகோணம் புஸ்தகஷாப்பு கே. வி. கதிர்வேல்பிள்ளை இயற்றிய

தேசிங்குராஜன்கதை திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு	0	3	0
நந்தனார் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
சாவித்திரி சத்தியவான் திருப்புகழ் காவடிச்சிந்து 1-ம் பாகம்	0	2	0
மேற்படி சாவித்திரி-சத்தியவான் 2-ம் பாகம்	0	2	0
மயில்ராவண சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	3	0
வள்ளியம்மை திருக்கல்யாண திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
காமதகன திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு	0	3	0
பவழக்கொடி திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு	0	2	0
இட்டிலிக்கும் உப்புமாவுக்கும் சண்டை	0	1	0
ராம நாம பஜனை கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ன மெட்டு இதிலுள்ள கீர்த்தனைகள் வெகு குதூகல முண்டாகும்	0	3	0
மாம்பழக்கும்மி.	0	1	0
பிரகலாத சரித்திர டிராமா	0	5	0
ஸ்ரீசௌளராஜப் பெருமான்பேரில் பக்திரஸ அருள்வாக்கு பதங்கள்	0	4	0
ஸ்ரீகண்ணபிரான் பஜனை கீர்த்தனை	0	2	0

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

த்ருவசரித்திரக் கீர்த்தனை.

இஃது

கும்பகோணம்,

ஸ்ரீ சேஷம்மாள்

இயற்றியது.

கும்பகோணம்-புஸ்தகஷாப்

காயன விகடகேசரி யென்னும்

கே. வீ. கதிர்வேல்பிள்ளை அவர்களால்

பார்வையிடப்பட்டு,

கும்பகோணம்-புஸ்தகவியாபாரம்

ஆர். கோவிந்தசாமி நாயுடு விருப்பத்தின்படி

பெ. ஆறுமுக முதலியாரால்

சென்னை:

முரஹரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1922.

இதன் விலை) (அணா 6

உ

சிவமயம்.

விளம்பரம்.

வித்தியாப் பியாசிகளுக்கு தெரிவிப்பது யாதெனில்:—

எமது புத்தகசாலையில் அனேகவித சரித்திரங்கள், திருப்புகழ், காவடிச்சிந்து வர்னமெட்டுகளில்எழுதி அச்சிட்டிருக்கிறோம் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசதாரருக்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகங்கள் தேவையானவர்கள் வேண்டியபுத்தகங்களின் விலைக்குத்தகுந்த போஷ்டு பிள்ளைகள்வாங்கி கவரில்வைத்து அனுப்பினால் உடனே நீர்கோறிய புத்தகத்தை அனுப்புவோம். தபால் பிள்ளைகள் அனுப்பாமல் அனுப்பச்சொல்லி எழுதினால் நாங்கள் அனுப்ப வி. பி. சார்ஜி 1-புத்தகத்திற்கு 5-அணா வாகும். அதனால் மேற்சொன்னபடி தபால் பிள்ளைகள் அனுப்பினால் நாங்கள் நட்பெட் போஷ்டாக அனுப்புவோம். நீங்கள் அவ்விடத்தில் 1-அணா குடுத்து வாங்கிக்கொள்ளவும். அப்படி அனுப்பினால் புத்தகம் உங்களுக்கு பத்திரமாக சேரும்.

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்.

நெ. 4, 2-வது சந்து, பெருமாள் கோயில் தோட்டம்,

மதராஸ்.

ஶ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

த்ருவ சரித்திரக் கீர்த்தனை.

விஷ்வக்ஸேனர் ஸ்தோத்திரம்.

1—கீர்த்தனம். ஹிந்துஸ்தான்காபி.

விக்னம் இல்லாமல் காப்பீர் விஷ்வக்ஸேனா
விக்னம் இல்லாமல் காப்பீர்

நித்தியனும் த்ருவர் சரித்திரத்தைச்சொல்ல
புத்திக்கவலை தீர்ப்பீர் விஷ்வக்ஸேனா விக்னம்

பெண்மதியால் சாஸ்திர கண்ணில்லாதவன்குற்றம்
எண்ணாமல் கிருபை பார்ப்பீர் விஷ்வக்ஸேனா விக்னம்

வேஷமுடன் சொன்னாலும் தோஷமில்லாமலென்னை
சேஷசாயியைச் சேர்ப்பீர் விஷ்வக்ஸேனா விக்னம்

சரஸ்வதிதோத்திரம்.

2—கீர்த்தனம். பந்துவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மாதா சரஸ்வதியே ஆதாரநாயகியே
நாதம்முழங்கும் தாயே வேதாந்தரூபி நீயே
வாதனைதனைத்தீர்த்து போகசுகத்தில் சேர்த்து
ஆதரிக்கும் என்தாயே நீயேகெதி
தாயே சரஸ்வதியே நீயேகெதி 1

நாலுவேதங்களுக்கும் மூலமான என்தாயே
நான்முகருக்கனுகூல பாரியும்நீயே
லீலாவினோதருக்கு நல்லமருமகள் நீயே
என்காலனைவிலக்கும் தாயே நீயேகதி
தாயே சரஸ்வதியே நீயே கெதி 2

வித்தாராய் ஜகத்திலே பத்தவதார் லீலை
உத்துமகிழ்ந்துசொல்ல சித்தத்தில் வந்துநில்லாய்
புத்திமதியுரைத்து குற்றம் குறைபொறுத்து
சர்த்தா தரிக்கும் தாயே நீயேகெதி
தாயே சரஸ்வதியே நீயேகெதி 3

பெற்றபாலனுக்குத்தாய் சித்தம் இரங்குவது
மெத்தப்புதுமையோ பெண்உத்தமியே உரையாய்
சக்திசரஸ்வதியே தத்வஸ்ரூபி நீயே
முததிமார்க்கத்துணையே நீயேகெதி
தாயே சரஸ்வதியே நீயேகெதி 4

ப்ரகாசமனதில் ஆசைக்கொடி படர்ந்து
கேசவரைமறந்து மோசம் வரத்தெரிந்தேன்
நேசத்துடன் கண்பார்த்து தே ஷவினையைத் தீர்த்து
சேஷசயனரை சேர்ப்பாய் நீயேகெதி
தாயே சரஸ்வதியே நீயேகெதி 6

ஆசாரியன் தனியன் விருத்தம்.

நாமென்றும் நம்முதென்றும் அக்ஞானத்தால்
நாரணரைத் தான்மறந்து நரகம்சேரும்
பாமரரைப் பார்வையினால் கரையிலேத்த
பரமபதந் தனிலிருந்து புவியில்வந்து
க்ஷேமமுடன் திருமந்திர முபதேசித்து
கெடுநாளாய் தொடர்ந்தபவ வினையறுத்து
நரசிம்மபுரந்தனில் விளங்கும் ஸ்ரீநி
வாஸமகா தேசிகர்க்குத் தாசியானேன்
அவரடி மலரில் தாசிய னேன். 1

மங்கிமன துறங்கி அக்ஞான இருளால்மூடி
ஸன்மார்க்கந்தனைத் தான்மறந்து மயங்கும்போது
மங்களமாய்க் கதிரவன்போல் அவதரித்து
மனதிலுள்ள காடாந்த காரந்தீர்த்து
சங்கு சக்ராங்கிதத்தால் பலவினைமழித்து
சகலருக்கும் சன்மார்க்கம் உபதேசித்து
சிங்கமாய் உதித்தவரை ஆராதித்த
ரங்கநாத மகாதேசிகரென்ற நிதிகண்டோம்
அவர்திருவடியே கதியென்றோமே. 2

சாகரத்து நீரெடுத்து அநேகமுமிக் காதரவாய்
மேகம் வருஷிக்கு மதுபோல் நாகசயனர்மீல
மேகவண்ணர் கதாபாகவத அமிர்தமதனை ச்கு
தேகமோகம் வைத்து தாகித்துநின்ற பரீக்ஷித்து மகாராஜரிஷி
வேகமுடன் மேகம்போல் சொரிந்தாதரித்த சுகப்ரும்ம
ரிஷியைப் பணிந்தேனே 3

3—கீர்த்தனம். ஆரபிராகம்-திரிபுடைதாளம்.

மங்கைகோமளவல்லிநாதரே பொங்கும் குடந்தையில்வாஸரே
சங்குசக்கரசாரங்ககெதையுடன் இங்கில்வந்தவதாரரே
ஸ்வாமிஎங்கிலும்பரிபூரணரே கண்டுபணிந்தேன்.

மத்ஸயகூர்மவராகஸிம்மரே வாமனஅவதாரரே
உச்சிதமானபரசுராமரே அச்சுதானந்தநித்யரே
ஸ்வாமிஸச்சிதானந்தநித்யரே கண்டுபணிந்தேன்.

காரணரேகௌஸல்யகுமாரரே பூரணஅவதாரரே
ராவணனைராவணனை வதைத்தோரே
ஸ்வாமிசீதாதேவிஸமேதரே கண்டுபணிந்தேன்.

நந்தர்மனைதனில்வந்துவளர்ந்த கோவிந்தநவநீதசோரரே
மந்தகாஸமாய்சொந்த பார்த்தனுக்குகந்து சாரத்தியஞ்செய்தே
மனமகிழ்ந்துசாரத்தியஞ்செய்தோரே கண்டுபணிந்தேன்

புண்ணியதர்மத்தைப்பொருந்த பூமியில்பொருத்தமலிகவதாரரே
உந்தன்சந்நிதியில்வந்து சரணாகதியானேன்
ஸ்வாமிசாரங்கராஜரே கண்டுபணிந்தேன்.

4 - கீர்த்தனம். நாதநாமக்கிரியைராகம்-ஜம்பைதாளம்.

சாரங்கராஜஉம்மை சரணமென்றுபணிந்தேன்
பார்புகழும்த்ருவசரித்திரம் பாடவென்றுநினைந்தேன்
ஆராவமுதேஉந்தன் அடியார்க்கருள்செய்து-இதை
பூரணமாய்நிறைவேற்றும் பூமியெங்கும்புகழ
ஆதியந்தமற்றவரே அகிலகுருநீரே
அண்டருக்கும்ஆண்டவராய் நின்றவரும்நீரே
நாகர்மேல்பள்ளிகொண்ட நாதப்ரமம்நீரே
அநேகங்கோடி அண்டங்களுக்காதாரம்நீரே
ஏகவஸ்துவாய்ஜகத்தில் எங்கும்நிறைந்தோரே
தேகதாரப்போல்அவதரித்த ஜெகன்மோகனரும்நீரே
வாய்மனஸுக்கெட்டாத மறைபொருளும்நீரே
மாயைக்குமேலாய்விளங்கும் லோகநாயகரும்நீரே
குடந்தைதனில்வாஸா எந்தன்கோமளவல்லீசா
உந்தன்குணசரித்திரம் உரைத்தாரும்கொண்டாடத்தரமோ
ஜகன்னாதாஉந்தன்வேதம் உண்மைஎன்றுமறியாது
ஆதிசேஷனாலும்உன்மகிமை அளவிடக்கூடாது
பூமிதனில்புழுதிதன்னைப் பிரித்தெண்ணக்கென்னாலும்
என்ஸ்வாமிஉந்தன்மகிமைகளை ப்ரஸங்கிக்கத்தரமோ
உன்தனிடகிருபையாலே அந்தரங்கபக்தாள்அவ ள்
சிந்தையினுலாராய்ந்து சந்தேகத்தைத்தள்ளி

ஞானவைராக்கியத்தால் கண்டுபெரியோர்கள்
கானல்ஜலம்போல்பிரமித்து கல்பிதமென்றெண்ணி
பக்தியினால்கொண்டாடி பணிந்துஉம்மைஉகந்து
யுக்தியினால்ஆராய்ந்து தத்துவத்தையறிவார்
உந்தனிடகுணமகிமை உகந்தபெரியோரை-நான்
சிந்தையினால்பணிந்துரைப்பேன் ஜெனனமீடேற
நான்பெண்மதியாலுரைத்து பிழைகள்வந்தாலும்-என்
புண்ணியனேபொறுத்துமனம் சகித்தருளவேணும்
புத்திரனார்மழலைச்சொல்லில் பெற்றவர்கள்உகக்கும்போல்
எந்தக்குற்றமதுவந்தாலும் பொருத்தருளுமையா
அகிலஜனரட்சகியே அனைவருக்கும்தாயே
சகலவித்தைக்கதிபதியே சரஸ்வதியும்நீயே
என்பேதைவேஷம்தனைப்போக்கி போதரஸம்போட்டி
ஆதரவாய்நாவில்வந்து அருள்செய்யுமப்பா 17

விருத்தம்.

இந்தப்ராப்தமான பவசாகரந்தாண்ட
நாரணனார்திருவடியை நம்பினேன்நம்பினேனே.

5--கீர்த்தனம். கேதாரராகம்-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

எங்குப் ஓரடியில் அளந்ததிருவடி
தாங்கிசதுர்முக அலப்பும்திருவடி
கங்கைபூரித்து ஜனித்ததிருவடி
கண்டுபணிந்தேன். 1

அண்டர்சேவித்து நிற்கும்திருவடி
தொண்டர்பூஜித்து உகக்கும்திருவடி
தண்டைசிலம்புகள் அணிந்ததிருவடி
கண்டுபணிந்தேன். 2

அகலிசாபத்தை தீர்த்ததிருவடி
சகலமுனிவரைக் காத்ததிருவடி
அகிலதாபத்தை யாற்றும்திருவடி
கண்டுபணிந்தேன். 3

கானகந்தனில் அலைந்ததிருவடி
மானின்பின்னோடு நடந்ததிருவடி
தீனசபரியை கார்த்ததிருவடி
கண்டுபணிந்தேன். 4

நல்லபூமலர் ஒத்ததிருவடி
பொல்லாச்சகடனை உதைத்ததிருவடி

காளியன் படத்தில் நின்றாடும் திருவடி
கண்டுபணிந்தேன் 5
ப்ருந்தாவனத்தில் சஞ்சரித்ததிருவடி
விந்தையாய்பசு மேய்த்ததிருவடி
சொந்தகோபியர் உகந்ததிருவடி
கண்டுபணிந்தேன்

விருத்தம்

பாரளந்தார் திருவடியை கோரகவே பணிந்து
சீரான த்ருவசரித்ரம்சொல்லவே சிந்தித்தேனே.

6 கீர்த்தனம். நாதநாமக்கிரியை-ஜம்பைதாளம்.

கண்ணிகள்.

உத்தான பாதருட புத்ரனதிபாலன
பக்திவைராக்யமுள்ள சுந்தர அதிசீலன்
விரக்தியுடன் வனத்தில்வந்து வருத்தமான தவத்தால்
நித்தியரைக்கண்டு அழிவற்ற வரம்பெற்றாரென்று
மைத்ரேயர் உரைக்கவுமேல் மறிச்சுபந்தவிதுரர்
உத்தமனா சரித்திரத்தை விஸ்தாரமாயுரையீர்
பக்தியுடன் கேழ்க்கவுமே மெத்தமனமகிழ்ந்து
விஸ்தாரமாக த்ருவசரித்திரத்தை யுரைத்தார்
ஸ்வாயம்புராஜரென்றும் சதுர்முகவர் புத்ரர் அவர்
தாய்தந்தைபோலே அனைவர்க்கும்சகலகுணமித்ரர்
பக்திநீதி தர்மத்துடன் மெத்த அரசாண்டு
தத்துவத்தை ஆராய்ந்து முத்திபதம்சேர்ந்தார்.

7— கீர்த்தனம். சௌராஷ்டராகம்-ஜம்பைதாளம்.

கண்ணிகள்.

உத்தானபாதரெண்டும் அவர்புத்ரர் அதிசத்யராய்
சப்தத்வி பாதிபத்யம் தந்தையைப்போலாண்டார்
சுநீதியென்றும் ஸ்ருசியென்றும் ஸொகுஸோடிருபாரியுடன்
மகத்துவமாய்க் கூடியிருமைந்தர் தனைபபடைத்தார்
நாகவிஷம்போல்ஸ்ருசி மோகத்தினால் பரவசமாய்
விவேகம்தன்னை மறந்துபோத போகம்புசித்திருந்தார்
மெத்தனையாள் மோகத்தினால் புத்திமதி கலங்கியவர்
உத்தமனை மடியில்வைத்து உகந்திருக்கும்போது
அந்தசமயந்தனிலே சந்திரனைப்போல் துருவர்-தன்
தந்தைமடிக் காசைவைத்து வந்தெதிரேநின்றார்
மூத்தாள்பெற்றபாலகனைப் பார்த்துமந்தராஜமன்னர்
சேர்த்தணைத்துக்கொள்ளாமல் மகத்துவத்தோடிருந்தார்.

அந்தகாரமாய்மோக பந்தவசம் தன்னில்ராஜன்
மந்தபுத்தியால்துருவரை மறந்துமவரிருந்தார்
புத்திமதியுள்ள துருவர் சித்தந்தனில் நொந்துமவர்
மெத்தஅவமானத்துடன் சற்றேஒதுங்கிவந்துநின்றார்

பார்த்துமதை சுருசியவள் ஆத்திரத்தோடோடிவந்து
க்ஷாத்திரத்தினால்மிகவும் வார்த்தைபெடுத்துரைத்தாள்
எந்தனிடபாலகனர் தந்தையுடன் மடியிருக்க-நீ
அந்தஆசையினாலன்றோ சிந்தைமிகநொந்தாய்

நேசத்துடன் ஈசுவரரை பூஜித்தாயாமானல்
ஆசையுடன்ராஜருன்னை அணைத்துமடிவைப்பார்
பக்தியுடன் ஆண்டவனைப் பணிந்து தவஞ்செய்திருந்தால்-என்
உத்தமனைப்போல்உன்னை உகந்துகண்ணால பார்ப்பார்

அந்தரங்கத்தோடுமெத்த முகுந்தரைநீ பூஜித்தால்
எந்தனுக்குப்பாலகனாய் வந்துஜனியாயோ
வேசியவள்உன்மாதா தாசிமைந்தனும்ஜெனித்து-மகா
ராஜன்மடிஏறுதற்கு ஆசைவைக்கலாமோ

கெட்டபூமிகளைஉழுது நட்டகல்லைவிரைபோலும்-நீ
துஷ்டவயிற்றில்ஜெனித்து கஷ்டமனுபவித்தாய்

8 கீர்த்தனம். எதுகுலகாம்போதிராகம்-ஜம்பைதாளம்.

பொல்லாதசுருசிமெத்த வல்லமையால்உரைத்து
சொல்லாசபாணத்தால துணித்தாரவர்மனதை
கேட்டுடனேத்ருவராஜர் கிலேசமமெத்தசகிக்காமல்
ஓட்டமுடன்ஓடிவந்து உருகிமெத்தக்கதற

நாலுவயசுள்ள அதிபாலன்வெகுசோகமண்டி-அந்த
நீதிசொன்னசொல்லைமெத்த நினைந்துநினைந்துருக
தன்னுடையபாலகனர் தவித்தழுததால்கேட்டு
அன்னையவள்எடுத்தவரை அணைத்துமடியில்வைத்தாள்

என்கண்மணியேகற்பகமே என்னுடையபாலகனே-ஆர்
உன்னையென்னசொன்னுளென்று அவரன்னைமெத்தகேட்க
மாதாவும்கேழ்க்கலுமே மைந்தன்த்ருவராஜனப்போ
ஆற்றுமையோடுரைப்பார் அழுதகண்ணீரடக்கி

9—கீர்த்தனம். காம்போதி-சாபுதாளம்.

பெற்றபிதாவண்டை சற்றேபோய்நின்றேன் என் அன்னை கேளாய்
மெத்தஉதாசினம்சித்தமமைசொன்னதை என் அன்னைகேளாய்
பொல்லாதவார்த்தை பொறுக்காதுரைத்தாளென் அன்னைகேளாய்
வல்லசொல்லாலே ஆயுதமில்லாலடித்தாளென் அன்னைகேளாய்

தங்கைதமடியேறதாகித்துநின்றேனென் அன்னைகேளாய்-அவள்
வந்துநேரேநின்று வாக்கா லுரைத்ததை அன்னைகேளாய்
தாஸிக்குமைந்தனென்றேசினளென்னை என் அன்னைகேளாய்- மகா
ராஜனும்கேட்டிதைபேசாதிருந்தாரே என் அன்னைகேளாய்
ஈசனைநீமெத்தபூஜிக்கவில்லையென்றாள் என் அன்னைகேளாய்
அந்தக்லேசத்தினுல்மனம்ரோசித்துவந்தேன் என் அன்னைகேளாய்
பெற்றபிதாதானேபேதகம் எண்ணினர் என் அன்னைகேளாய்
தன்உத்தமனைத்தானேஉகந்துகொண்டாடினர் என் அன்னைகேளாய் 6

10—கீர்த்தனம். கேதாரராகம்-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

பாலகனர்சொல்லைக்கேட்டு பதறியேகீழேவிழுந்தாள்
ஆலைவாய்க்கரும்புபோலந்த நீலிசொன்னசொல்லால்நொந்தாள்
வேரறுத்துநின்றகொடிகள் வெய்யலிலேவாடுமேபோல்
செந்தாமரைப்பூமுகம்வாடித் தவித்துப்புலம்பினளே
என்காலகெதியோவிதியோ இதைஆராலேசொல்லலாமையோ
நித்தியனைநெஞ்சினுள்ளே நன்பக்தியுடன்பூஜிக்கவில்லை அதனுல்
பர்த்தாவைப்பிரிந்தேன்மெய்யே அவளுரைத்ததெல்லாமுள்ளதையே
நீயும்என்பாவியுதரத்தில்ஜனித்துஇந்த தாபத்தையனுபவிப்பாய்
சுருசிஉந்தனைப்பெற்றால்நீயும் சுகத்தையனுபவிப்பாய்
அச்சுதரைநீயும்மெத்த நிச்சயமாயாராதித்தால்ஸ்வாமி

உச்சிதத்துடன்வருவர் நீஇச்சித்தவரம்தருவர்
இந்திரன்சந்திரன்குபேரன ஈசானன்வருணன்வாயு அவாள்
அந்தரங்கமாய்பஜித்து வெகுசந்தோஷம் அனுபவித்தார்
ஸ்ருஷ்டிக்கும்பிர்மா முதலாய் அஷ்டதிக்குபாலரெல்லாமவாள்
கஷ்டத்தினுல்காயம்நொந்து அவாள்இஷ்டமாய்த்தவமிருந்து
விஷ்ணுவைஎதிரேபார்த்து அபீஷ்டமானவரம்பெற்றார்
உத்தமிதன்மாதாசொல்ல புத்திரனும்கேட்டதெல்லாம்
பக்தியுடனேஉகந்துஇதை சத்தியமென்றேநினைந்து
ஸ்ரீமந்நாராயணரைநேரேகாணப்போறேன் இந்ததாபம்தீர
என்றுஅன்னையைநமஸ்கரித்து ஆசிர்வாதங்களைப்பெற்று

ஞானவைராக்கியத்தோடே த்ருவர்கானகந்தனில்வந்தாரே
ஸ்ரீபதியைஎங்கும்தேடி அவர்சிந்தையிலேகொண்டாடி
ப்ரேமையுடனேபஜித்து ஸ்வாமியைவர்ணித்தாரே

11 - கீர்த்தனம். பந்துவராளிராகம்-ரூபகதாளம்.

கண்ணிகள்.

தீனபந்தோவென்றநாமமே ஹரேகிருஷ்ண
தீனபந்தோவென்றநாமமே சத்யமான
கானகந்தனில்வந்து காருமேகோரமான
கானகந்தனில்வந்து காருமே 1

தூணிலுதித்தநரஸிம்மமே பிரகலாதருக்காக
தூணிலுதித்தநரஸிம்மமே வேகத்துடன்
ஆனைதன்னைக்காத்தபிரம்மமே முதலைவாயில்
ஆனைவினையைத்தீர்த்த ப்ரம்மமே 2

பஞ்சவரிடபரிஉந்தனை ஆகிருஷ்ணாவென்று
பஞ்சவரிடபரிஉந்தனை ஸ்மரித்தவுடனே
நெஞ்சிலிரங்கிக்கார்த்தநாதனே- அவள்மானந்தன்னை
நெஞ்சிலிரங்கிக்கார்த்தநாதனே 3

திக்குவேறில்லையென் ஐயனே இந்தவனத்தில்
திக்குவேறில்லையென்ஐயனே உன்பாதமலரை
முக்கியமாய்வந்து நம்பினேன்சீர்பாதமலரை
முக்கியமாய்வந்துநம்பினேன் 4

12- கீர்த்தனம். சௌராஷ்டராகம்-ஜம்பைதாளம்.

இந்தபடி த்ருவர் அந்தராத்மாவை சிந்தைதனில்வைத்து உசந்துவருணி
கோவிந்தமாதவரென்ற நாமத்தைக்கூவிவரவே (த்ரு
அந்தவேளையில்வந்துநாரதர் அந்தரங்கமாய் அணைந்துபாலனை
இந்தவயதுதனில்நீஎங்கே போகிறாயென்றுகந்துகேழ்க்க
சந்ததாயுடன்சேர்ந்திருக்காமலிந்த வனந்தனில்வந்தகாரணம்
அந்தரங்கமாய்எந்தனுக்கு அறியஉரையாய்
உன்னிதமாய்வுன் அன்னையண்டையில் ஸ்தன்யபானத்தைப் பண்ணும் சிசுவன்றோ
என்னகாரணத்தினாலேநீ இந்தவனத்தில்வந்தாய்

13 — கீர்த்தனம். எதுகுலகாம்போதிராகம்-சாபுதாளம்.

நாரதரிப்படிக்கேழ்க்க நோகத்ருவர் உரைக்க
ஆறுதகுறையைச்சொல்வர் நாரதரிடம்
ஆறுதகுறையைச்சொல்வர் 1

பொல்லாதஇளையாள்மாதா சொல்லாகிய ஆயுதத்தால்
வில்லாலடிபட்டுநொந்தேன்நான் நாரதஸ்வாமி
வில்லாலடிபட்டுநொந்தேன் 2

பெற்றதாயார் அனுமதியால் நித்தியரைக் காணமெய்யாய்
சித்தம்வெறுத்துவந்தேனையா நாரதஸ்வாமி
சித்தம்வெறுத்து வந்தேனையா. 3

14. கீர்த்தனம். கேதாரராகம்-ரூபகதாளம்.

நேசத்துடனேகேட்டுமகாமுனி நெஞ்சினுள்ளேமகிழ்ந்து
ராஜாக்களுடையஸ்வபாவத்தினாலன்றோ ரோசித்திங்குவந்தாய்

எத்தனைபாக்கியமோ அவள்புத்திரன் ஒருத்தன் அனுபவிக்க
பெற்றபிதாவண்டைசற்றேபோய் நின்றேனுரைத்தாளுக சினமாய்

அந்தம்பொறுமையினால்நீமெத்த இந்தவனத்தில்வந்தாய்
எந்தெந்தவேளையிலேதேதுவந்தனுபவித்துச் சிந்தைமகிழவேணும்

நாரதர்சொல்லுமேல்துருவர் இத்தைசாரமென்றேகிரகித்து
நாராயணரைநோக்கவேகாணப்போறேன்நானென்றுரைத்தான்

கேட்டுமகாமுனியும் அவர்வெகு பூட்டகமாயுரைப்பர்
காட்டில்காடிபுலிமதயானைகள் கூட்டமாய்நேரேவாரும்

இத்தனைஜந்துவிலேபரமாத்மா ஒருத்தரேதானிருக்கார்
மெத்தப்பயந்துநான்இதெல்லாம்கேட்கிலே தத்துவம்சொல்லுமென்றார்

எத்தனையோயுகமாய்யோகிகள் இந்தவனத்தில்தவமிருந்து
நித்தியானந்தரைசித்தத்தினால் காணாமல்தேடுகிறார்

உந்தனிடகிருபையால்நம் முகுந்தரைக்கண்டுவாறேன்
அந்தரங்கத்துடன்மந்திரோபதேசம் சிந்தைமகிழ்ந்துரையீர்

மந்திரம்யேதறிவேன்நானிப்போ துந்தனுக்கேஉரைக்க
சொந்தத்தினால்பரிசோதித்துபாலனை விந்தையாய்தானுரைத்தார்

நான்முகவருக்கும்நீர்முன்னே வந்துதித்தீர்
நாலுவேதத்திற்குமூலமாய் ஆண்டவன்லீலையைநீரறிவீர்

அஞ்சாதேயென்றுசொல்லி பாலகனை ஆதரவோடணைத்து
மிஞ்சிவிளங்குகின்ற விஷ்ணுபதந்தனில் அஞ்சாமல்நீயிருப்பாய்

சூத்ரதாரியானஸ்வாமி ஸ்வரூபத்தை தியானம்பண்ண
ஆர்த்தியைத்தீர்க்கும்அலங்காரதேகம் அடையாளம்சொல்லுமென்றார்

விருத்தம்.

மதியுள்ளத்ருவராஜர் மாமுனியைத்தான்கேட்க
மாதவரின்திருவடியை வர்ணித்துச்சொல்லுவாரே.

15—கீர்த்தனம். நாதநாமக்கிரியை ராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஸ்மரியாய் நீபாலா ஸ்வரூபந்தன்னே ஸ்மரியாய் நீபாலா

அநுபல்லவி

செந்தாமரைமலர்போல் அந்தமானமுகார
விந்தத்தையுந்தன் சிந்தையுனுள்ளே ஸ்மரியாய்

சரணங்கள்.

கோடிசூரியன்கூடி கூட்டமாய்உதித்தாற்போல
சிரேஷ்டமாய்த்தரித்தோர் கிரீடகுண்டலத்தை—ஸ்மரி
அர்த்தசந்திரன்போலொத்த அச்சுதர்நெற்றியில்
உத்தமமான அந்த கஸ்தூரிதிலகத்தை—ஸ்மரி
வில்லுப்போல்வளைந்ததோர் உல்லாசபுருவத்தை
எள்ளுப்பூவைப்போலொத்த நாசிகைதன்னை—ஸ்மரி
அச்சுதர்முகத்தில் மின்னுச்சியோடளகங்கள்
உச்சிதவண்டுகள் மெச்சிக்கொண்டாற்போல்—ஸ்மரி
கண்ணடிபோலிரு கபோலத்தின்காந்தியை
உன்னிதலட்சுமி மன்னவன்வடிவை—ஸ்மரி
அந்தமாய்ஆணிமுத்தா லலங்கரித்தாப்போல்
குந்தபுஷ்பத்தோடொத்த தந்தபந்தியைநீ—ஸ்மரி
பங்கஜஇதழொத்த மங்களநயத்தோ
டங்கமாய்பார்க்கிற சிங்காரவடிவை—ஸ்மரி
மதுரமாய்வசனிக்கும் அதரகாந்திகளுடன்
ஸ்ரீதரன் புன்சிரிப்பானமுகத்தை—ஸ்மரி
சங்கத்தைப்போலொத்த சிங்காரகண்டத்தில்
மங்களமாய்வன மாலேயோடுஹரியை—ஸ்மரி
முத்துடன்கௌஸ்துப ரத்னஹாரத்துடன்
நித்தியானந்தத்தின் உத்தமவடிவை—ஸ்மரி
கஜத்தின்தும்பிக்கைபோல பெருத்துநீண்டிருண்டதி
விசித்திரமான சதுர்புஜத்துடவடிவை—ஸ்மரி
சங்கணிந்தரித்ததோர் பங்கஜகரந்தனில்
சங்கொடுசக்கரம் சாரங்கம்கதையை—ஸ்மரி
முச்செகம்தனைவைத்து ரக்ஷிக்கும்குக்ஷியை
லக்ஷ்மிவசிக்கும் வக்ஷஸ்தலத்தை—ஸ்மரி
பெருத்தபின்சட்டிமேல் தரித்தவராணுல் ரவேபோ
டுத்தமானபீதாம்பர தரியை—ஸ்மரி

பக்ஷிவாகனத்தின் புஜத்தின்மேல்விளங்குகிற
சச்சிதானந்தரோ டுச்சிதமொடமையை ஸ்மரி
பூமகள்லக்ஷ்மி கோமளகரத்துடன்
ப்ரேமையைப்பிடித்திடும் ஸ்வாமியுடஜானுவை—ஸ்மரி
அண்டர்கள்சேவித்து தொண்டர்கள்பூஜித்து
தண்டைசிலம்பணிந்த ஆண்டவன்பாதத்தை—ஸ்மரி
மங்களபரிசுத்த கங்கைமகிழ்ந்துதித்த
பங்கஜமலரொத்த சிருங்காரபதத்தை ஸ்மரி
பத்துசந்திரன்பரிசுத்தமாய் உதித்தாற்போல்
உத்தமநகத்தையுன் சித்தத்தினுள்ளே—ஸ்மரி
ஸுந்தரவடிவுடன் மந்தகாசமாய்நிற்கும்
நந்தமுகுந்தரைஉந்தன் ஹ்ருதயத்தில்—ஸ்மரி

16—கீர்த்தனம் முகாரிராகம்-ஆதிதாளம்.

மதுவனந்தனில்தரித்து நீநேமவிரதத்துடன்பலம்புஜித்து
ஸ்ரீதரனைக்குறித்துநான் சொன்னபடிசிந்தையில்தியானித்து
பக்தியுடன்நினைந்து நீபரிசுத்தமாய்தவமிருந்தால் ஸ்வாமி
ப்ரத்யக்ஷமாய்வருவர் நெஞ்சில்நினைந்தவரந்தருவர்
ஆதரவோடனைத்துநாரதர் மாதவரைக்குறித்து
த்வாதசஅக்ஷரத்தை துருவர்செவிதனில்போதம்தெரியஉரைத்தார்

விருத்தம்-சாவேரிராகம்.

ஆதரவாய்நாரதரும் அதிபாலத்ருவர்க்கிரங்கி
வேதாந்தஸாரத்தை போதித்துச்செவியினுள்ளே
ஸ்ரீதரனைநேரேகாண ஸாதகத்தைச்சொன்னார்
துருவர்கேட்டுருகி நின்றாரே.

17—கீர்த்தனம். ஸௌராஷ்டிராகம்-சாபுதாளம்.

பல்லவி.

இன்றநாரதர்க்கிணங்கி தொண்டனாய் நம்வணங்கி

அநுபல்லவி.

யுக்திபக்தியுள்ளபாலன் அவர்உரைந்தமந்திரங்களெல்லாம்
சிரத்தையுடனேபிரயோகித்துப் பக்தியுடனே ஸேவித்து இன்

சரணங்கள்.

வேகமாய்மனத்தெளிந்து ஏகப்ரும்மமென்றறிந்து
தேகங்களெல்லாங்குளிர்ந்து தாகங்கள்மிகத்தணிந்து நின்ற
ஸந்தேகமெல்லாந்தீர்ந்து அந்தரங்கத்தில்மகிழ்ந்து
சிந்தையினுள்ளேஉகந்து குருவலவந்தனஞ்செய்துபணிந்து இன்

18—கீர்த்தனம். மோகனராகம்-சாபுதாளம்.

ஸேவித்தபாலனைப்பார்த்து சிந்தையாலனுக்கிரகித்து
நான்போய்வாரேனென்று நாரதர்போனாப்போதே
கன்றைபிரிந்தபசுக்கள் பின்னேதிரும்பிபார்க்கும்போல்
சின்னபாலனைப்பிரிந்து முன்னேநடந்தார்.

விருத்தம்.

மதியுள்ள துருவராஜர் மகாமுனியைத்தான்பிரிந்து
மாதவரையும்நினைந்து மதுவனத்தில்தோன்றினரே
நாரதரும்வீணைகொண்டு நாடாளும்ராஜனிட
நல்மகனர்சேதிசொல்லநாடினர் ஸங்கீர்த்தனத்தைப்பாடினரே.

19—கீர்த்தனம். நாதநாமக்கிரியைராகம்-ஆதிதாளம்.

நாரதர்பகவன்நாமத்தை உரைத்தவர்பாராளும் உத்தானபாதரண்டையில்
நாராயணமதுசூதன கோவிந்தாவென்ற
ஸாரத்தையறிந்தவர் நாமஸாரத்தையறிந்தவர்
பாராயணஞ்செய்துநாரதர்வந்தார் நாமத்தைஉரைத்தவர்

விருத்தம்.

பார்த்துமந்தநாரதரைராஜன்பதறி எதிர்கொண்டழைத்து
ஆசனத்தின்மீதில்வைத்து அர்க்யபாத்யம்கொடுத்து
ஸ்தோத்திரங்கள்செய்தவரை சேர்ந்துருகிநின்றார்
நின்றதைக் கண்டாரே.

20—கீர்த்தனம். கேதாரகௌளராகம்-ஜம்பைதாளம்.

ராஜாஉந்தன்சரீரம் சுகமோ ராஜேந்திர
ராஜ்யஐசுவரியம் க்ஷேமமோநீ க்லேசித்ததென்ன
காரணம்உந்தன்முகதேஜஸ்ஸு குறைந்ததேனோ. 1

புத்ரகளத்ராதிகள் சுகமோஉந்தனிட
மித்திரபந்தவர் க்ஷேமமோ
சத்துருக்களாலேபயமோ உந்தனுக்கு
மெத்தமனம் நொந்ததேனோ. 2

விருத்தம்.

நாரதரும் கேழ்க்கலுமே நாடாளும்ராஜன்
சொல்வார் தன்பாலகரைத் தான்பிரிந்த
மூலத்தை உரைத்து துக்கித்தாரே.

21—கீர்த்தனம். நீலாம்புரிராகம்-திரிபுடைதாளம்.

கேளும்மகாமுனியே இந்தக்லேசம் வந்தவினையை
பாலகரைப்பிரிந்து பாவியானேன், கேளும்

மோகவனத்தில்புகுந்தேன் தேகம்ப்ரக்ஞைமறந்தேன்
சாகமாட்டாதுயிரைத் தரித்தேனையா, கேளும்

சத்துருஇளையாள்வாய்த்தாள் என்சித்தங்கலங்கடித்தாள்
மூத்தாள்பெற்றபாலனைப் பழித்துரைத்தாள், கேளும்

மூடனாய்மோசம்போனேன் க்ரீடாமிருகம்போலானேன்
வாடிநின்றபாலனை வனம் ஓடச்சொன்னேன், கேளும்

பெற்றமாதாவாகிலும் தன்புத்திரனென்றழைத்து
வைத்திருக்காதே மைந்தனைதேற்றுளேபோ, கேளும்

கானகந்தனில் மதயானைகரடிபுலி
தீனியாய்புஜித்தால்என்மைந்தனைநான் என்னசெய்வேன், கேளும் 5

விருத்தம்.

புத்திரரைத்தான்பிரிந்து புலம்பும்மகாராஜனுக்கு
நாரதரும் ப்ரத்யுத்தரம்சொல்லி மனம்
தேற்றுவார் அவர் துக்கத்தை யாற்றுவாரே.

22—கீர்த்தனம். பந்துவராளிராகம்-ரூபகதாளம்.

பல்லவி.

அஞ்சாதே நீமகாராஜ ஆதித்யனுக்கு சமதேஜ

அநுபல்லவி.

உந்தன்குலம்கரையேற த்ருவர்
வந்துதித்தார் பாலகராய்
குஞ்சரத்தின்வினைதீர்த்த நாதன்
உன்மைந்தனையும் வந்துகாப்பார் அஞ்சாதே 1

தத்துவக்ஞானத்தை அறிந்து அவர்
பக்தியுடன்தவமிருந்து
ஆண்டவனைநேரேகண்டு அவர்
வேண்டியவரம்பெற்றுக்கொண்டார் அஞ்சாதே 2

காலசக்ரத்துக்குமேலாய் உன்
பாலன்விளங்கவேபோருர் இந்தப்
பாராளவேஇங்கேவாரார் நீயும்
பூரித்துக்காணவேபோராய் அஞ்சாதே 3

விருத்தம்.

அந்தரங்கமாய்முனியும் வந்துநாரஇந்திரனுக்கு
தன்மைந்தனிடசேதிசொல்லி மறைந்தார்ராஜன்
மனம்தேறி யிருந்தாரே.

23—கீர்த்தனம். மத்யமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பாலன் அருந்தவமிருந்தார் மதுவனத்தில்
பாலன் அருந்தவமிருந்தார்

அநுபல்லவி.

பாலனும்ஆண்டவன் லீலைநினைந்தவர்
நாலுவேதத்துக்கும் மூலத்தைக்குறித்து பாலன்

சரணங்கள்.

அஷ்டாங்கயோகத்தைசாதித்து அரிஷட்வர்க்க
துஷ்டரைக்கிட்டவொட்டாதடித்து பட்டிமாடுபோல்
ஓடிப்பறக்கிறமனந்தன்னை
கெட்டியாய்வரிந்தவர் நிஷ்டையிலிருந்து பாலன் 1

அன்னஆகாரத்தைதகித்து அதிபாலன்
முன்மாஸத்தில் பலம்புஜித்து
உன்னிதமாயிரு கண்ணையுமூடியே
தன்னையறிந்தவர் நின்றொருகாலால் பாலன் 2

ரெண்டாம்மாசத்தில் த்ருவபாலன்சாகிலையை
உண்டாரதிகாசார சீலன்
கண்டவிஷயம் மித்தையென்றவர்பாவித்து
அண்டத்துக்காண்டவர் உண்டென்றுநினைத்து பாலன் 3

பத்தாமாசத்தில் ஒன்பதானல் நாளைக்கொருக்க
சுத்தஜலத்தைப் பாணம்பண்ணார்
பக்தியினுல் மனம் சுத்தமாய்தெளிந்தபின்
நித்தியானந்தர்மேல் சித்தத்தைநிறுத்தி பாலன் 4

வாயுவைஆகாரம்புஜித்து நாலாமாஸத்தில்
காயத்தின்மீதில் நினைவற்று
அயனையும்பெற்றமாயனை ஹ்ருதயத்தில்
உபாயமாய்நிறுத்தின ஸ்வாயம்புபோன் பாலன் 5

விருத்தம்.

அண்டத்தை உண்டவரை ஆதாரமானவரை
கொண்டாடி ஹிருதயத்துக்குள் த்ருவர்
கண்டார்மூர்த்தாவெடித்து நின்றாரே.

24 —கீர்த்தனம். எதுகுலகாம்போதிராகம்-ஆதிதாளம்

அண்டரெல்லோருமாய்க்கூடி திண்டுமுண்டாடிதன்
ஆண்டவனண்டையில்வந்துவேண்டியேநின்றார்
க்ஷீரஸாகரத்தில் பள்ளிகொண்டநாதனே திக்
காரும்வேறேயில்லை எங்களாண்டவன்நீரே
ஆதியும்அந்தமத்யம் நீயேகம்என்றேனல்
வேதங்கள்முறையிடும் ஸ்ரீநாதாஉந்தனை
முக்குணங்கள் அற்ற ஆதிமூலப்ரும்மமேசங்கு
சக்கரத்தைக்கைப்பிடித்த ஸ்வாமிநீர்தாமே
எந்தவிதத்தால்எங்களுக்கு வந்ததாபத்தென்றறியோம்
நந்தாமுகுந்தாகோவிந்தா வந்தனம்ஐயா
எங்கள் ஆபத்தை விலக்குமையா ஆதிமூலமே
எங்களைக்காப்பாற்றிரக்ஷித்துக் கடைக்கண்ணால்பாருமே

விருத்தம்.

இப்படி அபயமிடுமண்டர்களை ஆனந்தர்
கையமூர்த்திஆண்டவரும் வாய்திறந்து
உரைத்தார் அண்டர்கேட்டுப் பூரித்தாரே.

25 — கீர்த்தனம். சுருட்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சிந்தைவேதனை விடுங்கள் தேவர்காள்
சீக்கிரத்துடன்போங்கள் நீங்களிருப்பிடம்
சீக்கிரத்துடன்போங்கள்

அநுபல்லவி.

அந்தரங்கமாய்நான் வந்திவேகமாய்
இந்தக்ஷணத்திலுங்கள் பந்தம்விலக்குவேன் சிந்தை

சரணங்கள்.

அஞ்சுவயதைஉடைத்த அதிபாலன்
தஞ்சமென்றெனையடுத்தான்
மிஞ்சிச்செய்ததவத்தால்
அஞ்சிவந்தீர்கள்மெத்த
நெஞ்சில்நினைத்தவரம்
நிரவதிமாய்த்தாறேன் சிந்தை 1

விருத்தம்

மாதவரும்அண்டர்களை ஆதரவாய்த்தானனுப்பி
ஸ்ரீதரனும்கெருடன்மீதில்வந்தார் அண்டர்
பனம் மகிழ்ந்தாரே.

26—கீர்த்தனம். மத்தியமாவதிராகம்-சாபுதாளம்.

பல்லவி.

வந்தாரேமேகவர்ணன் வடிவுடன்
வந்தாரேக்ஞானகாவலன்

அநுபல்லவி.

வந்தாரேநந்தமுகுந்தன் கெருடன்மேல்
மந்தகாஸமாய் மகிழ்ந்ததிவேகமாய்
அந்தரங்கத்துடன் சொந்தத்ருவர்மீதில்
சிந்தையிறங்கி உகந்துவரந்தர வந்தார்

சரணங்கள்.

தங்கப்பருவத்தைப்போலவிளங்கும் மங்களவாகனத்தில்
சிருங்காரமானநீலமலைபோல பங்கஜபர்வாரார்
சங்கொடுசக்கர ஏந்திகரந்தனில்அங்கத்துடன்நித்தியாநந்தர்மேனியில்
குங்குமசந்தனம்எங்கெங்கும்வசிக்க அலங்காரமானதிவ்வியாபரணத்துடன் வந்தார் 1

அக்ஷரமானபொருள் அகிலர்க்கும்சாக்ஷியாய்நின்றபரர்
குக்ஷியிலண்டங்களைவைத்து ஸம்ரக்ஷிக்கும்ரதன்வாரார்
யக்ஷகின்னரகந்தர்வர்கள் கானங்கள்பண்ண உச்சிதமாய் பதினெட்டுவாத்யமுழங்க
அக்ஷயமாயண்டர்புஷ்பமழைசொரிய ரக்ஷிக்கும்தாசரதி லக்ஷ்மிக்குப்பதி வந்தார் 2

பூரணமானபரப்ரும்மமே நேரேகண்முன்னேவர
காரணகாரியரே கரந்தனில்சாரங்கம்ஏந்திவர
ஆயிரஞ்சூரியன் பாரிலுதித்தாற்போல் காரணர்குண்டல கிரீடங்கள்சோபிக்க
மாரில்கௌஸ்துப ஹாரப்ப்ரகாசிக்க நாராயணர்தானே நேரேத்ருவர்முன்னே வந்தார் 3

விருத்தம்.

மந்தகாஸமுகத்தோடு வந்தெதிரேநின்றஉடனே
அந்தரங்கத்திலிருந்தஉருமறந்தார் த்ருவர்கண்ணைத்திறந்தாரே.

27—கீர்த்தனம். சௌராஷ்டரம்-ஆதிதாளம்.

பல்லவி.

சண்டாரே ஆண்டவன்சேர்வை-த்ருவர்வணங்கி
நின்றாரே ஸ்வாமிக்குநேரே

அநுபல்லவி.

கண்டாரேஆண்டவன்சேர்வை நின்றாரேஸ்வாமிக்குநேரே
கொண்டாடிக்கண்ணீருதிர்த்து கண்டங்கள்தழதழத்து — கண்

சரணங்கள்.

சித்ருபமாய்நிறைந்து பத்துவிதமாய்ப்பிறந்து தன்
பக்தர்தவத்தில்உகந்த நித்தியானந்தப்ரபுவை — கண்டாரே

வருத்தமாய்த்தவமிருக்கும் உத்தமமானயோகிக்கும்
மெத்தவேதுர்லபமான தத்துவத்துள் பொருளை — கண்டாரே

லோகநாயகராயெங்கும் ஏகவஸ்துவாய்விளங்கும்
மேகநிறமேனியரை ஷாட்குண்யபரிபூரணரை — கண்டாரே

மேகனிறஹரியைக்கண்டு தேகபரவசங்கொண்டு
பாகுபோல்உருகித்ருவர் பணிந்தார்தாகமிகத்தணிந்தாரே — கண்டாரே

28—கீர்த்தனம். புன்னாகவராளி-சாபுதாளம்.

பல்லவி.

அச்சுதருப்கிர்பைபார்த்து ஸ்வாமி உச்சிதவாக்யம்உரைத்தார்
வந்தனம்செய்ததைப்பார்த்து முகுந்தர்மகிழ்ந்துபூரித்து

அந்தரங்கத்தோடுஅணைத்து த்ருவர் சிந்தையில்தாபத்தைதீர்த்து
இந்தவனந்தனில்வந்தாய் சிந்தையில்என்னைநினைந்தாய்பெற்ற

தந்தையேன்தாயேன்மறந்தாய்மெத்த எந்தனைத்தானேநினைந்தாய்
நெஞ்சிலுறுதிபிடித்தாய் நீதஞ்சமென்றென்னையடுத்தாய்

என்னைநினைப்பவரில்லைநினைந்தாலும் கண்முன்வருவதில்லேன்
நீஎல்லோரையும் விடமேலாய் நல்லதவஞ்செய்தாய்சீலா

நான்உந்தன் தவங்கண்டுகந்தேன் சிந்தையில்மெத்தமகிழ்ந்தேன்
உனக்கெந்தவரம் வேணும்பாலா நீஇச்சித்ததெல்லாங்கேளாய்

விருத்தம்.

ஆண்டவரும் த்ருவரைமெத்த அணைத்து மடிமீதில்
வைத்துதன்தொண்டர்மேல் கருணையுடனே
வேண்டியவரம் கேளென்றாரே

29—கீர்த்தனம். காதநாமக்கிரியைராகம்-சாபுதாளம்.

பல்லவி.

வரனெனைத்தேற்க உந்தனையன்றி வரனைநான் வேண்டேன்

அநுபல்லவி.

கருகமணிபூணக் கருத்தில்நினைந்தோர்க்கு
நவரத்னங்கிடைத்தால் நானும்மைக்கண்டபின் வரனெ

சரணங்கள்.

பித்தளைபூணவேணுமென்று புத்தியிலெண்ணுவோர்க்கு
பத்தரைமாற்றுத்தங்கம் கிடைத்திட்டாற்போல்
நித்தியரெனக்கு ப்ரதியக்ஷமானபின் வரனெனை 1

நசுவரமானராஜன் படிக்கிச்சித்தேன்முன்னே
சாசுவதமாம்ஜகதீசுவரன்தானே நீர்நேசத்துடன்பிரகாசித்துனின்றபின்
ஏதும்அறியா அக்ஞானபேதைநானையே வரனெனை 2

வேதமறியேன்உந்தன் பாதத்தைநம்பினேன்
நாதாஉந்தனைஸ்துதிக்க போதம்வரும்படிக்கு
வரந்தாருமையா எனக்கிந்தவரந்தாருமையா வரனெனை 3

விருத்தம்.

கொஞ்சியேத்ருவர்சொல்ல வஞ்சையுடஹரியும்
நல்லதன்கைபாஞ்சசன்யத்தால் மூகத்ததுடைத்தார்
க்ஞானத்தைக் கொடுத்தாரே.

30—கீர்த்தனம். காதநாமக்கிரியைராகம்-சாபுதாளம்.

பல்லவி.

உம்மைநம்பினேன் ஸ்ரீமுகுந்தா நிர்மலமான ஸ்ரீனித்தியானந்தா

அநுபல்லவி.

ப்ரும்மாண்டந்தன்னை நிர்மித்து ஆதி
ப்ரும்மாவைநாபிக் கமலத்திற்பெற்று
சர்வசூத்திரத்தை தரித்துஜகத்தை
பொம்மலாட்டம்போல்நீர் சிருஷ்டித்தகூத்து உம்மை 1

அந்தமும் ஆதியும்அற்று ஸ்வாமி
உந்தனுக்கிந்த நபரூபமற்று
பந்தமும் மோக்ஷமும் அற்று
ஸ்வதந்த்ரார்ய ஸ்வானந்தத்தில்ரமித்தீர் உம்மை 2

உள்ளும்புறம்பும் னிறைந்துநீர்
எல்லோர்சரீரத்துக் குள்ளேயிருந்து
எள்ளில்எண்ணேபோல் மறைந்துஇப்போ
உல்லாசத்தோடே உயர்ந்திங்கேவந்தீர் உம்மை 3

பக்தபராதீனர் தாமேநீர்
தத்துவத்துக்கெல்லாம் கர்த்ருத்வம்தாமே
உத்தமலோகரும் தாமே
முக்தர்க்குமோக்ஷப்ரதாதாவும்தாமே உம்மை 4

விருத்தம்.

இருகைகளேயும்தான்குவித்து எதிரேநமஸ்கரித்து
ஸ்ரீஹரியினிடமுகத்தைப்பார்த்துத்ருவர் அற்புதவாக்யம் உரைத்தாரே.

31—கீர்த்தனம். சௌராஷ்டரம்-சாபுதாளம்.

கண்ணிகள்.

அச்சுதஹரிஜகதீசா அற்புதசச்சிதானந்த ப்ரகாசா

வந்தனம்செய்துந்தனேப்பணிந்தேன் ஸ்வாமிநான்
உந்தனேசரணமென்றடைந்தேன்
தந்தையும்தாயும் நீயென்றுனினேந்தேன் னினேந்துடன்
சிந்தையில் தாபம்தணிந்தேன்
அந்தர்யாமியாய் மறைந்துஉலகத்தில்
தந்திர உபாயங்களறிந்து
இடைவெளியன்றியில் நிறைந்தபிர்ம்மமே
சடுதியில்கெருடன்போல் வந்தீர் 5

தேகவிகாரங்களற்ற பரிசுத்த
ஏகரே அழிவற்ற னித்ய
பக்தவரத்தைதரித்தீர் முக்கிய
பக்தர்க்கிரங்கி முன்காத்தீர்
அப்படிப்போலெனக்காக வடிவுடன்
அவதரித்தநீலமேகா
திக்குவேறில்லே என்னேயாஉந்தனே
முக்யமாய்நம்பினேன் மெய்யா
அச்சுதரேகிருபைபாரும் ஸ்வாமிநான்
இச்சித்தவரம் நீர்தாரும் 10

எல்லோரையும்விடமேலாய் ஸ்வாமிநான்
உல்லாசத்தோடிருந்தால்
இப்படிக்சேவரம் தாரும்ஜக
தீசுவரனே கிருபைபாரும்

நித்யானந்தப்ரபோசரணம் னிரந்தா
பக்தவத்ஸலா ஹரிசரணம்
சங்குசக்ரதாரசரணம் சர்வகன
மங்களமாத சரணம்

விருத்தம்.

சரணம்சரணமையா ஸகலலோகேசா
கருணையோடெந்தனைக் காத்து ஆதரித்து
ஜனனமரண துக்கங்களற்று நிர்ணயமா
யிருந்தால்நித்யத்வம்தாரும்.

32—கீர்த்தனம். கேதாரராகம்-சாபுதாளம்.

ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஆதிமூலந்தன்னைக்கண்டு
பாலத்ருவர்எல்லோருக்கும் மேலானவரனைக்கேழ்க்க
கேசவர்மனமகிழ்ந்துதன்தாஸன் பாக்யத்திலுகந்து
சாசுவதமானபதத்தை ஜகதீசரும்தானினைத்தார்

33 - கீர்த்தனம். ஆனந்தபைரவிராகம்-ரூபகதாளம்.

கண்ணிகள்.

உந்தன் தவங்கண்டுகந்தேன் பாலா
எந்தனிடபதம்தந்தேன் பாலா

காலசக்கரத்துக்கும் மேலாய்னின்றுநீ
கோலாகலத்துடன் ஆளாய் பாலா

இஷ்டத்துடன்ஆதி விஷ்ணுவைகம்பினல்
கஷ்டமென்றுஜகத்தெண்ணும் பாலா

இந்தலோகத்தை யிழந்திங்கேவந்தால்
எந்தனுக்கிந்த அபவாதம் பாலா

உத்தமனும்ப்ராதா சத்துருவால்பட்டு
மிருத்யுலோகத்தை யடைவான் பாலா 5

புத்திரசோகத்தால் மெத்ததவித்தவள்
சித்தம்பையுந்தீயில் பாய்வாள் பாலா

பெற்றபிதாஆண்ட சப்தத்வீபம்மெத்த
சற்றுக்காலமிருந்தாளாய் பாலா

ஏகமாய்நீவெகு போகமனுபவித்து
சீக்கிரமாய்வந்துசேராய் பாலா

விருத்தம்.

அந்தரங்கத்துடனே வந்து துருவர்க்கிரங்கி
சிந்தைதனில் நினைந்தவரந்தந்தார் ஸ்வாமி
அந்தர்த்தியானமாய் மறைந்தாரே.

34—கீர்த்தனம். புன்னாகவராளி-ரூபகதாளம்.

மாதவரைத்தான்பிரிந்து மனதுமிகநொந்து
ஏதுக்கிந்தவாண்மைக்கு என்றித்ருவர் நினைந்து
கற்பகதருவை வேண்டிக்கார்த்து வெகுகாலம்
அற்பமான நொய்யரிசி யாசித்தவனைப்போலும்
அற்புதமாய்என் ஆண்டவனே அருந்தவத்தால்கண்டேன
சொற்பமான தேகம்மெத்த சுகிக்கவரம்கொண்டேன் 3

35—கீர்த்தனம். ஆநந்தபைரவி-சாபுதாளம்.

பல்லவி.

ஆசையால்மோசம் போய்நின்றேன்-ஜக
தீசனென்றேவரம் கொண்டேன்.

அநுபல்லவி.

ஏஷணைமூன்றையுமிழ்ந்து ப்ரகாசமாய்மனந்தெளிந்து
தஸனாய்நின்றுந்தன்பாதம் பூசைசெய்வேனென்றுகேளா ஆசை

சரணம்.

மாயையால்வஞ்சிக்கப்பட்டேன் ஸ்தூல
காயாபிமானத்தால் கெட்டேன்
ஒய்யாரமாயென் ஆண்டவனே
ஐயோநான் வியோகமானேன் என்
கையும்காலும் கண்ணும்வாக்கும் என்
ஐயனுக்குதவாமலே ஆசையால

விருத்தம்.

புத்தியேவேணுமென்று பாமனைக்கேளாமல் என்
புத்திக்குமோசமென்று த்ருவர் புலம்பியேவனத்தில்வந்தார்.

36—கீர்த்தனம். காம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

உத்தானபாதரும் தன்புத்திரரைநினைந்து
மெத்தமனங்கலங்கி நொந்து
புத்திஅதிகமுள்ள உற்றமந்திரியோடுசொல்லி
புத்ரசோகத்தால் புலம்ப 1

முன்னேநாரதமுனி சொன்னவாக்யத்தையெண்ணி
இன்னலும்ஜீவனைத் தரித்தேன்என்
கண்ணனபாலனர் இன்னம்வரக்காணேனே நான்
என்னசெய்வேனென்று தபித்தார் 2

ராஜன்ஆற்றுமலே துக்கிக்கபார்த்துமந்திரி
மெத்தப்ரீதியுடன் வேகமாய்வந்துதன்
தூதர்களையழைத்து துருசுடன்ஆக்ஞாபித்து
த்ருவரைப்பார்த்தழைத்து வாருங்களென்றார் 3

அந்தஆக்ஞைகேட்டுவந்து அவிடம்விட்டு
அந்தரமான காட்டில்தேட
சந்திரோதயம்போல் சேர்வந்த த்ருவரைக்கண்டு
சிந்தைமகிழ்ந்தானந்தம் கொண்டார் 4

பாராளுமன்னன்முன்னே நேராகவந்துநின்று
காரியக்காரர் என்ன்சொல்வார்
சீரானபாலகனார் வாரார்வனத்திலெங்க
ராஜன்கேட்டு பூரித்தானந்தத்துடன்பொங்க 5

விருத்தம்.

குமாரரிதோவருகிறாரென்று ராஜன்பூரித்து
ஆனந்தங்கொண்டு பாரெங்கும்தெரிய ஜய
பேரிதன்னைப் போடுமென்றாரே.

37—கீர்த்தனம். தோடிராகம்-சாபுதாளம்.

கண்ணிகள்.

கட்டளையிட்டவாக்கியத்தை இஷ்டமுடன்கேட்டுகந்து
பட்டணம்ஜோடிக்கமெத்த சட்டமாய்பேரிஅடித்தார்
கேட்டுஎல்லோரும்பூரித்து கூட்டங்கூட்டமாய்திகைத்து
காட்டில்ப்ரவேசித்தபாலன் காரணந்தன்னைஉரைத்தார்
முன்னிந்தஇளையாள் மாறுசொன்ன அனியாயவாக்யத்தால்
சின்னவயசில்வெறுத்துப்போனாரே த்ருவர்வனத்தில்
முன்னேவனம்போனபாலன் பன்னகசயனரைக்கண்டு
உன்னிதவரங்கள்கொண்டு நன்றாகவேவாராரென்று
மங்கையரெல்லோரும்மெத்த பொங்கியேமனம்பூரித்து
தங்கள்தங்கள்வீதிக்கேற்க மங்கமாகஜோடித்தார் 5

38—கீர்த்தனம். பந்துவராளிராகம்-சாபுதாளம்.

கண்ணிகள்.

முத்தினால்அலங்கரித்து ரத்னத்தினால்தீபம்வைத்து
சித்திரப்ரதிமைபோலே மெத்தஜோடித்தார்
பன்னீரால்ஜலம்தெளித்து பஞ்சவர்ணத்தலலங்கரித்து
உன்னிதகோலங்களினால் நன்றாய்ஜோடித்தார்
தோரணங்கொடுங்கைகட்டி ஊரெங்கும்நிஜான்கள்நாட்டி
பூரணகும்பங்கள்கொண்டு நேராகவந்தார்

மங்கையரெல்லோரும் மெத்தசிங்காரவஸ்திரம் தரித்து
தங்கபூஷணங்களினால் அலங்காரம் செய்தார்
அத்தனைப்பெருமாய்ச்சேர மெத்தஎதிர்கொண்டுவர
உத்தானபாதர்மகிமையைக் கொண்டாடுவார்

39—கீர்த்தனம் சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

பாக்கியம் பாருங்கள் உத்தானபாதர் பாக்கியம் பாருங்கள்.

அநுபல்லவி.

பாக்கியம் பாருங்கள் பரமனை நேர்கண்டு
சிலாக்யமாய் துருவர் சீக்கிரமாய்வந்த பாக்கியம்

சரணங்கள்.

சின்னசிசுவொழிந்து கானகந்தனில்வந்து
நன்முயமனந்தெளிந்து நிர்ணயத்தவம்செய்த பாக்கியம் 1

ஆநுமறியாநித்ய நாராயணனைமெத்த
பூரணப்ருமத்தை நேரகத்தரிசித்த பாக்கியம் 2

உத்தமகுலதீபரத்தினம் அவதரித்து
நித்தியரைக்கண்டு அழிவற்றவரம்பெற்ற பாக்கியம் 3

விருத்தம்.

ஊரிலுள்ளோரும்கூடி உகந்துத்ருவரைக்
கொண்டாடி நாரணனை் தொண்டர்வாரார்
என்று எதிர்கொண்டு வாரார்.

40—கீர்த்தனம். மோகனராகம்-சாபுதாளம்.

பல்லவி.

பாராளும் மன்னவன் வாரார் த்ருவர்க்கெதிரே
பாராளும் மன்னவன் வாரார்

அநுபல்லவி

பேரிமத்தளதாள படகதுந்துபிமேளம்
சீருடனேமுழங்க பூரித்து... பாராளும்

... சேனைகளுடன்மெத்த
... களோடு தானெதிர்கொண்டு பாராளும்

விருத்தம்.

நித்திரையைக்கண்டு அழிவற்றவரம்பெற்றுவந்த
புத்திரனைநேரேகண்டு ராஜன்பூரித்து
ஆனந்தங் கொண்டாரே.

41—கீர்த்தனம். எதுகுலகாம்போதிராகம்-சாபுதாளம்.

கண்ணிகள்.

அந்தரமானவனத்திலே த்ருவர் சந்திரோதயம்போல் வந்தார்
அந்தரங்கத்துடன் தந்தையைவந்து பணிந்துவணங்கியேநின்றார்
பெற்றமாதாவுந்தன் புத்திரரைப்பார்த்து சேர்த்தவர்மார்போடணைத்
தார் என்
சித்தத்துக்கேற்றபுத்தியுள்ள குலரத்னமென்று உச்சிமுகந்தார்
அந்தரங்கத்துடன் நந்தமுகுந்தரை ஆனந்தமாய்க்கண்டசுதனை
எந்தன்குல தீபமைந்தனே உந்தனையிழந்து இன்றளிருந்தேனே
வாரியெடுத்து மடிமேல்வைத்து மகாராஜன் மெத்தமகிழ்ந்தார்இதைப்
பாரிலுள்ளோர்கண்டு பாக்யவசமென்று பாலகரைக்கண்டுகந்தா

42—கீர்த்தனம். நாதநாமக்கிரியைராகம்-சாபுதாளம்.

கண்ணிகள்.

தந்தையைவிட்டெழுந்திருந்தார் தர்மமாய் த்ருவர்
வந்திருமாதாவைப் பணிந்தார்
அந்தரங்கத்தோடணைந்து ஆனந்தகண்ணீருதிர்த்து
வந்தாயோஎந்தன்கண்மணியே க்ஷேமத்துடனே
வந்தாயோ எந்தன் கண்மணியே. 1

உன்னைப்பிரிந்த நாள்முதலாய் அன்னஆகாரம்
உண்ணேன் உறங்கேன் எந்தன்பாலா
பண்ணளந்தவாமனரை வெண்ணெயுண்டமாதவரைக்
கண்டாயோஎந்தன்கண்மணியே கண்டு ஆனந்தம்
கொண்டாயோ எந்தன்கண்மணியே. 2

தூணைப்பிளந்துகொண்டுதித்தார் உதித்தவுடன்
தானே இரணியனைக் கிழித்தார்
ஞானபக்தியுள்ள பிரகலாதர்க்கிரங்கிக் காத்தோரைக்
கண்டாயோ எந்தன்கண்மணியே 3

ஆனைக்குவந்தவினைதீர்த்தார் ஆரண்யந்தன்னில்
மூன்றுகு[illegible]ர்ந்தோடி வதைத்தார்
கண்டாயோ எந்தன்க[illegible]ந்தமானப்ரும்மத்தை 4

43—கீர்த்தனம். நாதநாமக்கிரி[illegible]

எனக்கந்தரங்குமுள்ளபால[illegible]
எந்தன்குலதீபமைந்தரே வந்தனஞ்செய்தகுமாரரே
சுந்தரமானமுகுந்தரைக்கண்டு சங்கொடுசக்கரக்கையரை 2
பங்கஜஇதழ்போல்நயனரை திவ்யசங்கொடுசக்கரக்கையரை
மங்களமானஎன்ஐயரைக்கண்டு அங்கவ்ருளிர்ந்தகுமாரரே 3
தேகவிகாரங்களற்றோரை ஜகன்மோகரானநித்யரை
மேகநிறம்பெற்றதேகரைக்கண்டு தாகந்தணிந்தகுமாரரே

விருத்தம்.

மாதாபிதாவும்பெற்ற மைந்தர்தன்னைக்கண்டுகந்து
ஆதரவாய்ப்புறத்தில்வர ஆனந்தமாய்நினைத்தாரே.

44 கீர்த்தனம். தோடிராகம்-ரூபகதாளம்.

கண்ணிகள்.

உத்தமரும்த்ருவரும் திவ்யமத்தகஜமேறி
நித்தியானந்தமாய் ஸ்ரீ அரிபக்தர்வாரார்பாரீர்
நாகரின்மேல்பள்ளிகொண்ட நாராயணதாஸர்
அனேகவிதம்விருதோடு ஆனந்தஉல்லாசர் 1
அண்டரெல்லாம்புஷ்ப மெடுத்தானந்தமாய்ச்சொரியஸ்வாமி
தொண்டர்வாரார்என்றுஜனல் கொண்டாடியேசெரிய
பட்டுக்களும்வம்சாவளி விருதாவளிசொல்ல
அட்டஹாசமாகவாரார் ஆனந்தமாய்வெள்ள 2
தித்தியொடுபுள்ளாங்குழல் சுருதிபாடகர்கூட்ட
மத்தளங்கள்தாளத்துடன் மகிழ்ந்துவீணைமீட்ட
ஸங்கீதங்கள்பலவாத்தியங்கள் மங்களம்பாட
ஸ்ரீங்காரமாய்தாசியர்கள் பொங்கிமகிழ்ந்தாட 3
அந்தணர்கள்நால்வேதங்கள் ஆனந்தமாய்வோத
விந்தையுடன்அஷ்டாதச வாத்தியமெடுத்தூத
உத்தமியர்சுமங்கிலியர் பத்திபத்தியாய்நின்று
முத்தாலாத்திசுத்தியவர் மெத்தானந்தங்கொண்டார் 4
மந்தஹாசமாகவாரார் மகாராஜனிடபுத்ரர்
முகுந்தஹரிமாதவருக் கந்தரங்கபக்தர்
ஸம்ப்ரமமாய்த்ருவர் சந்தோஷமாய்மகிழ்ந்து
அன்புடனேஅரண்மனையில் ஆனந்தமாய்வந்தார். 5

45 - கீர்த்தனம். பந்துவராளி-ரூபகதாளம்.

ஆனைதனைவிட்டிறங்கி அனைவருக்கும்அடிவணங்க
தூணில்உதித்தவர்தொண்டர் பூரணசந்திரன்போல்நின்றார்
முத்துரத்னபூஷணங்கள் மெத்தசோபிக்கப்ரகாசிக்க
உத்தமவடிவாய்நின்றார் சுத்தமாய்த்ருவர் 1
கோடிசூரியன்போல் மெத்தகிரீடகுண்டலந்தரித்து
பேட்டியையுடன்விளங்க சிரேஷ்டமாய்த்ருவர்
சங்குசக்கரம்தரித்தஸ்வாமி தாஸருக்குதிவ்ய
மங்களாலாத்திகள்சுற்றி மகிழ்ந்துபூரித்தார் 2
அனேகவாத்தியங்கள்பாங்காய் ஏககாலத்தில்முழங்க
தாசம்தணிந்தெல்லோரும் தேகப்பூரித்தார்
மெள்ளவேத்ருவர்நடந்து உல்லாசத்துடன்உகந்து
உள்ளேவந்துதானுழைந்தார் நல்லவேளையில் 3

உத்தானபாதரும் தன்புத்திரரைக்கண்டுகந்து
ரத்னஸனத்தின்மீதில்வைத்து மோகித்தார்
போதம்மெத்தவே அறிந்தவேதவிப்ரர்உகந்து
ஸாதுவாக்யத்தால்த்ருவரை ஸகலர் பூஜித்தார் 4

ப்ரீதியாய்த்தன்பாலகர்க்கு ஏற்றகன்னிகைவிசாரித்து
நேர்த்தியாய்விவாகம் நடத்திபார்த்துமோகித்தார்
அஷ்டதிக்கெல்லாம் புகழ சட்டமாய்மனமகிழ
இஷ்டமாய்த்ருவர்க்கு திவ்யபட்டங்கட்டினர் 5

விருத்தம்.

சட்டமுடனேத்ருவருக்கு பட்டாபிஷேகம்செய்து
இஷ்டமுடன்மைந்தர் தன்னைக்கண்டார்ராஜன்
மட்டற்ற ஆனந்தங்கொண்டாரே

46—கீர்த்தனை. முகாரிராகம்-சாபுதாளம்.

பல்லவி

நீதியாய்ராஜ்யம் ஆளலுற்றார் துருவர்
ப்ரீதியோடெல்லோரை ஆதரித்தார்

அநுபல்லவி.

பெற்றபிதாமாதேபோலே அனைவரையும்
வைத்துதுருவா ஸம்ரக்ஷித்தார் நீதியாய்

சரணங்கள்.

ஸாதுக்களோடே கூடிக்கொண்டுஸதா
ஸ்ரீதரன்லீலையைப் பாடிக்கொண்டு
மாதவர்செய்த விசித்திரத்தை
எப்போதுமெடுத்துக் கொண்டாடிக்கொண்டு நீதியாய் 1

நித்தியானந்தரையும் நினைத்து அவர்
சித்தந்தெளிந்து மனமகிழ்ந்து
மெத்தவேப்ராமண பக்தியுடன்கூடி
சத்வகுணத்துடனேவணங்கி நீதியாய் 2

வத்ஸனென்றும்த்ருவர் உத்கலனென்று இரு
உச்சிதமைந்தர் தனைப்படைத்தார்
அச்சுதர்பாதாரவிந்தத்தில் இச்சையாய்
நிச்சயபாவனையோடிருந்தார் நீதியாய் 3

உத்தமனும் ஒருநாள்தினத்தில் வேட்டை
ஒருத்தனும் ஆடிவந்தான் வனத்தில்
சத்துருராக்ஷதர் வந்தடித்தவனை
மிர்த்யுலோகத்துக் கனுப்பிவைத்தார் நீதியால் 4

பெற்றமாதா அதைக்கேட்டுருகி
சித்தங்கலங்கி மனமுருகி

பற்றியெரியும் வனத்துத்தீயில்பாய்ந்து
புத்திரனுக்காக உயிரிழந்தாள் நீதியாய் 5

இத்தனை துக்கத்தைக் கேட்டுநொந்து த்ருவர்
சித்தம்கலங்கி மனந்தளர்ந்து
மெத்தசேனையோடு யுத்தசன்னதமாய்
சத்துருவோடவர் வந்தெதிர்க்கும்போது நீதியாய் 6

சத்தியலோகத்திலிருந்த அந்த
ஸ்வாயம்பு வேகத்தோடங்குவந்து
புத்திரனர்பெற்ற புத்திரனைப்பார்த்து
புத்திமதிகளைத் தானுரைத்தார் நீதியாய் 7

நம்முடையபக்தி மார்க்கத்துக்கிதேருது
நமக்குயுத்தங்கள் செய்வதும்போராது
உத்தமனுக்காயுசு உள்ளவஸ்துவிருந்தால்
சத்துருவால் கொள்ளக்கூடாதுபாலா நீதியாய் 8

க்ஞானபக்தி வைராக்கியத்தைஅவர்
வேண்டியபடிக்குத் தானுரைத்தார்
காரணகாரியமிரண்டுக்கும் ஹேதுவாய்
பூரணபிர்மமென்றே போதித்தாரவர் நீதியாய் 9

விருத்தம்

இத்தனையும்மையையுட மித்தையென்றே
உரைத்துசத்தியலோகம் தனிலேஸ்வாயம்பு
நடந்தார்த்ருவர் இத்தையெல்லாம்
சத்யமாய் நினைத்தாரே.

47—கீர்த்தனம். புன்னாகவராளிராகம்-சாபுதாளம்.

பல்லவி.

கேட்டுமெய்யென்றுகந்தார் த்ருவர்தன்
பாட்டன்சொல்லால் தெளிந்தார்

அநுபல்லவி.

ஆட்டிவைப்பான்கையில் அகப்பட்டபொம்மைபோல்
பூடகஸம்ஸார நாடகமென்றெண்ணி கேட்டு

சரணங்கள்.

மெத்தமனஞ்சலித்தார் ஸம்சாரத்தை
மித்தையென்றே நினைத்தார்
புத்ரனுக்குஅவர் ராஜ்யத்தைஒப்பிவித்து
வஸ்துவாய்ப்ப்ரும்மத்தை ஸத்யமாய்ப்பாவித்து கேட்டு 1

ரொம்பமனம்வெறுத்தார் சம்சாரத்தை
துன்பமென்றே நினைத்தார்
முன்போல்வனம்வந்து அனபுடனேத்ருவர்
இன்பமாய்ஸ்வாமியை நம்பித்தவம்செய்தார் கேட்டு 2

விருத்தம்.

அந்தரங்கத்துடன் ஆனந்தமாய்ஸ்மரிக்க
முகுந்தருடஏவலினல் ஸநந்தரும்நந்தனரும்
வந்தார்வந்து த்ருவர்க்கெதிரேநின்ருரே.

48—கீர்த்தனம். ஆனந்தபைரவிராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

வந்தார் அந்தஸநந்தநந்தனர் அந்தமாய்வெகு சந்திரவடிவாக

அநுபல்லவி.

மந்தஹாஸமாய் சிந்தைஉகந்து
வைகுந்தம்தனைவிட்டு இந்தஉலகத்தில் வந்தார்

சரணங்கள்.

முத்துசரம்நவரத்னம்சோபிக்க ரத்னகுண்டலகிரீடம்பிரகாசிக்க
விஸ்தாரமாய்திருநெற்றிதனில்நல்ல கஸ்தூரிதிலகங்கள்சோபிக்க
வாஸ்தவமாய்அழிவற்றுவிளங்குகிற உத்தமமானசூரியர் வந்தார்
ஆதிஅந்தங்களிரண்டுமற்றவர் சாதுக்கள்மீதில்கருணையுள்ளவர்
பேதபாவனையேதுமற்றவர் போதயமாகபூர்ணமானவர் (வர் வந்தார்
ஸ்ரீதரனைப்போலவடிவுகொண்டவர் வேதசாஸதிரத்தின்முடிவில் நின்ற
ஸ்ரீங்காரமாய்ச் சதுர்புஜங்கள்பிடித்தவர்
சங்குசக்கரம் கெதைகள்பிடித்தவர்
செங்கமலத்தின் முகத்தோடொத்தவர்
கங்கைபற்றபூஷணங்கள் தரித்தவர்
மங்களமாய்த்திரு வடிவுகொண்டவர்
பொங்கிமகிழ்ந்தவர் பூரணசந்திரன்போல் வந்தார்

விருத்தம்.

கண்டுத்ருவ்ர் ஸநந்தரைக்கொண்டாடத்
தோற்றுமல்க்சண்டம் தழுதழுத்துகண்ணினல்
நீருதிர்த்துநின்ருர் அண்டவொண்ணத
ஆனந்தம்கொண்டாரே

49 கீர்த்தனம். சௌராஷ்டராகம்-சாபுதாளம்.

கண்ணிகள்.

பார்த்து துருவர் ஸநந்தனர் பணிந்து மனமகிழ்ந்து உம்மை
ஸ்தோத்திரங்கள் செய்யவென்ருல் நான்பாத்திரமேஸ்வாமி 1
உன்னிதமாய் ஸேவைதந்த எனஉத்தமர்காள் சரணம்
என்னைக்கரையேற்றவந்த என் புண்ணியரே சரணம் 2
ஸ்வப்ரகாசமாய் விளங்கும் சூரியரே சரணம் மாயைக்
கப்புறத்தில் தாண்டிநின்ற ஆனந்தரே சரணம் 3
கர்பகுணமற்ற நித்ய கருணநிதேசரணம்
கல்மஷங்கற்ற சித்தநிர்மலரே சரணம் 4
நேத்திரம்போல் ஸ்வாமிக்கெதிர்நின்றவாகள்சரணம்
ப்ரீதியுடன் இங்குவந்த பரஞ்சோதியரே சரணம் 5

விருத்தம்.

பக்தியுடனேயுருகிப் பணிந்தோரும்த்ருவரைப்
பார்த்துசேர்த்தவர்கள் தானணைத்துசிரஸ—
தன்னில்கரத்தைவைத்து காத்துரக்ஷிப்போமென்று
கருணையுடனே உரைத்தார்.

50 — கீர்த்தனம். நாதநாமக்கிரியைராகம்-ரூபகதாளம்.

கண்ணிகள்.

அதிபாஞ்சையோடு த்ருவராஜரை யழைத்துமவர் அணைத்து
மதுரமானவாக்கியத்தால் மகிழ்ந்துமெத்தஉரைத்தார்
சின்னசிசுதன்னில்உந்தன் அன்னைதன்னைமறந்தீர்
கானகத்தில்மகாமுனியைக்கண்டு க்ஞானமறிந்தீர்
விரக்தியுடன்வனத்தில்வந்து வருத்தமானதவத்தால்
கருத்தினுள்ளே ஸ்ரீஹரியை நிறுத்தமெள்ளநினைந்தீர்
விக்கினங்கள்ஏதுமின்றி முக்யதவமிருந்தீர்
சங்குசக்கரத்தைதரித்து வந்தஸ்வாமி தன்னை அறிந்தீர்
கஷ்டமானபூலோகத்தில் கருத்தாசைகள் அற்றீர்
இஷ்டமுடன்விஷ்ணுலோகம் இருக்கபதம்பெற்றீர்
நாகர்மீதுபள்ளிகொண்ட நாராயணரும்மை
வேகத்துடன்அழைத்துவர விட்டாரிதோநம்மை
வாருமிந்தரதந்தனிலே ஏறும்த்ருவராஜர்
நாராயணரை நம்பினதீரா அம்ரமேயா
அற்புதமாய்த்ருவராஜரை அழைத்துரதம்ஏற்றி
இப்புரத்தில்ஸ்வர்க்கலோக மார்க்கந்தன்னில்நடத்த
ரத்னமுத்தால்அலங்கரித்த ரதந்தனிலேவந்தார்
பெற்றமாதாஸ—நிதிதன்னைப் பிரியமுடன்நினைந்தார்
அவர்சித்தந்தனில் அபிப்பிராயத்தைமெத்த அவர் அறிந்து
உத்தமியாள்ஸ—நிதிதன்னை சித்திலவாள்கொணர்ந்து
புத்திரனுர் த்ருவரண்டையில் மாதாதனைச்சேர்த்தார்
மெத்தவெகுஆனந்தமாய் சித்தந்தனில்மகிழ்ந்தார்
ஒருவருக்கும்எட்டாதந்த உயர்ச்சியுள்ளபதத்தில்
ஸ்ரீபதியுடக்ருபையால் த்ருவர் அங்குவந்துநிலைத்தார்
காலச்சுழல்சக்கரத்துக்கும் மேலாகவேநின்றுர்
நீலமேகவர்ணன்கிருபையால் ஆனந்தங்கொண்டார்
இஷ்டமுடன் அண்டர்களெல்லாம் புஷ்பமழைசொரிந்தார்
அஷ்டதிக்குபாலரெல்லாம் ஆனந்தமாய்மகிழ்ந்தார்
கூட்டமுடன்அஷ்டாதச வாத்யமெடுத்தூத
விஷ்ணுபதம்தன்னிலவந்து பட்டாபிஷேகஞ்செய்தார்
ஒருகற்பத்துக்கழியாத இந்த த்ருவலோகத்தை அண்டார்
மறுபடியும்நாராயணன் திருவடியை அடைந்தார்

விருத்தம்.

உத்தானபாதருடைய புத்திரனார்சரித்திரத்தை
பக்தியுடன்உரைத்தவர்க்கும் சிரத்தையுடன்கேட்டவர்க்கும்
நித்யஸுகங்களாம் ராஜ்யபாக்யசம்பத்துடனே
மெத்தவெகுகீர்த்தியே சஸ்ஸு இத்தனையும்உண்டாம்
ஸத்வகுணம்மேலாகும் தமஸ்ஸு ரஜஸ்ஸோடும்
பக்திஞானசித்திகளுமுண்டாம் சித்தந்தன்னில்தான்தெளிந்து
தத்துவத்தைக்கண்டு உத்தமமாய் ஸாலோகசாமீபஸாரூப்யம்
இத்தனையும்தானடைந்து முக்திபதஞ்சேர்வார்.

51—கீர்த்தனம். நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

கேளீர் அற்புதசரித்திரம் ஆனந்தமாக
கேளீர் அற்புதசரித்திரம்

அநுபல்லவி.

வாசுதேவசர்வேசுவர கேசவ
தாஸன்த்ருவராஜன் செய்ததோர்கதையை
ஆசையுடனுரைத்து நேசமாய்க்கேட்டோர்கள்
ஸம்ஸாரார்த்திகள்தீர்ந்து அகண்டார் அப்புறம்வாரார் கே

சரணங்கள்.

மாசங்கள்தீர்த்ததி தோஷங்கள்தொலைந்து
க்லேசப்பறந்து ரிஷிகேசனைநினைந்தால்
சாத்வதமானஆதி சேஷசயனனுடன்
பேசியேஎதிராகதாஸனாய் நிற்பார் கேளீர்

52—கீர்த்தனம். மங்களம்-சுருட்டிராகம்-சாபுதாளம்.

உத்தானபாதருதி புத்ரன் அதிபாலன்
சித்தந்தெளிந்து வனத்தில்தவஞ்செய்ய
மெத்தகருணையாய் பக்தர்க்கிரங்கியே
ப்ரத்யக்ஷராய்வந்த நித்தியானந்தர் மங்களம் மங்களம் 1
தீனமாய்கத்தின யானைதன்னைக்காத்து
தூணில்உதித்து ஹிரண்யன்மார்கிழிந்து
ஞானியானப்ரகலாதரை ரக்ஷித்த
தீனதயாபரா ஸ்ரீநரசிம்மா மங்களம் மங்களம் 2
பாபபவன ஆபத்திலைநொந்து
பூபதியேஉந்தன் ஸ்ரீபாதத்தைநினைந்து
ஆபத்துகாலத்தில தாபத்துடன்கூப்பிட்ட
த்ரோபதியைக்காத்த ஸ்ரீபதேக்ருஷ்ண மங்களம் மங்களம் 3

பவந்துதே மங்களம் மங்களம்.

த்ருவ சரித்திரக் கீர்த்தனை முற்றிற்று.

1,2 PAGE MISSING IN BOOK

கும்பகோணம் - இராமசசந்திரன் இயற்றிய

காப்பிக்கும் பழையதுக்கும் சண்டை தேத்தண்ணீர் மத்தியஸ்தம் 0 1 0
பாலியப்பெண்கள் தலையணை மந்திரம் இரண்டுபாகம் அடங்கியது 0 1 0
பூஜா ராமாயணம் 0 1 0
சூர்ப்பணகா பங்கம் டிராமா 0 4 0
கிருஷ்ணலீலா டிராமா 0 5 0
பாஸ்கரதாஸ்சிடன் வெள்ளைசாமி தாஸரியற்றிய பக்திரசகீர்த்தனை
1-ம் பாகம் 0 5 0
,, ,, ,, ,, 2-ம் பாகம் 0 5 0

சுவாமிமலை S. பொன்னம்பலம்பிள்ளை இயற்றிய

திரு ஏரகமென்னும் சுவாமிமலை சுவாமிநாதசுவாமி காவடிச்சிந்து 0 2 0
இராமாயணம் சுந்தரகாண்டம் மாருதி விஜயமென்னும்
இலங்காதகனம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0

சுவாமிமலை கு ரு முத்தையாபிள்ளை இயற்றிய

பொய்சொல்லா புனிதனெனும் சத்யஅரிச்சந்திர திருப்பு-கா-சிந்து 0 3 0

மதுரை வித்வான் கலியாணசுந்தரம்பிள்ளை இயற்றிய

மன்மதராஜன் சரித்திர லாவணி எரிந்த கக்ஷி 1-க்கு 0 3 0
பஞ்சரத்தின திருப்புகழ் மூலமும் உரை 0 3 0
எமனை ஜெயித்து சிம்மாசனம் ஏறிய ஓர் அரசகுமாரன் சரித்தி
ரம் என்னும் சித்திரா புத்திரன் கதை 0 6 0
ஸ்ரீமத் பரந்தாமன்பேரில் இந்துஸ்தான் வர்னமெட்டு
பஜனை ஜாவளிகள் முதல்பாகம் 1-க்கு விலை அணு 0 2 0
தாடகை சம்மாரம் டிராமா 1-ம்பாகம் 0 2 0
சீதா கலியாணம் பரசுராம பங்கம் டிராமா 2-ம் பாகம் 0 2 0
வழிநடை உப்புமாவு பாட்டு 0 1 0
சம்பந்திக்கும் மாப்பிள்ளைக்கும் ஏசல் 0 2 0
சம்பந்திக்கு சமையல்செய்யும் அப்பளப்பாட்டு 0 1 0
பல ஸ்தலங்களின்பேரில் பாடிய சிவப்புகழ் 0 6 0
குசேலமாமுனி சரித்திரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 3 0
ஞான சவுந்தரி திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 3 0
சரசாங்கி ஜவளி முதற்பாகம் 0 2 0
சூடிகொடுத்த நாச்சியார் என்னும் கோதை கல்யாணம், ஆண்டாள்
பரிணயக் கும்மி 0 3 0
சிறுத்தொண்ட நாயனர் திவ்ய சரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து
வர்ணமெட்டு அடங்கியது 0 2 0
பாரிஜாத நாடக கும்மியும், ஸ்ரீரங்கநாதன் சந்நிதியில் திருட்டுப்
போன கும்மியும் 0 2 0
ஆர். நடராஜ ஆசாரி. கே. கே. தங்கவேலுபிள்ளை இவர்கள் பாடி
வரும் சுதேச கள்ளன் பார்ட்டு 0 2 0
நாடகங்களில் விகடம் சில்லரை வேஷங்களில் சிலது எல்லாரும்
சொல்லும் நல்ல சில்லரை பாட்டுகளும், விதூஷக ஆக்டும்
உண்டு. 0 4 6
சித்தர்கள் மகத்துவ வினவிடை கும்மி 0 1 0
பார்ஸிஇந்துஸ்தான் பதங்களும் அடங்கிய ஸ்ரீமகாவிஷ்ணு
பஜனை கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 3 0

ஸ்ரீமகா பாகவதத்தில் துலாபாரநாடக கும்மியும்
ஸ்ரீ ரங்க நாச்சியார் வசந்த உற்சவ கும்மியும் 0 2 0
சக்குபாய் சரித்திரம் டிராமா 0 8 0
குசேல சரித்திரம் டிராமா 0 8 0
பாகவத திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0
பரங்கிப்பேட்டை—டி—ஆர்—சம்பந்தா என்பவரால் இயற்றிய
இந்துஸ்தான் பார்வதி சதாரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0
மகா மாட்சிமை தங்கிய கீர்த்தி சிங்கமென்னும் கண்டிராஜன் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 4 0
சக்குபாய சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 3 0
ஸ்ரீ கண்ணன் யமுனையில் பின்னமரத்தில் நடத்திய கோபிகா வஸ்திராபரணம் கொம்மி 0 3 0
அதி பராக்கிரம சாலியாகிய மதுரைவீரன் திருப்புகழ் காவடிச்சிந்து வனர்மெட்டு 0 3 0 பவளக்கொடிசரித்திரம் டிராமா 0 3 0
ளச்சக்கிரவர்த்தி திருப்புகழ் காவடிச்சிந்து (முதல் பாகம்) 0 2 0
ஷை இரண்டாம் பாகம் 0 2 0
அதிரூப அமராவதி திருப்புகழ் காவடிச்சிந்து 0 3 0
திருத்தணிகை சிவசுப்ரமண்யர் கீர்த்தனை திருப்புகழ் வர்னமெட்டு 0 2 0
புதிய கலியாணவாழ்த்து ஏசல் ஓடம் லாலி ஊஞ்சல் அடங்கியது 0 2 0
சிட்டிசேலைக்கும் நாட்டு சேலைக்கும் சண்டை 0 1 0
காகூர் ஆண்டவர் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0
விநாயகர் கீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 2 0
சுப்பிரமணியர் கொத்து என்னும் அட்சரமாலையும், சத்துரு சங்காரமாலையும், சத்துருசங்கார திருப்புகழும், விநாயகர், சுப்பிரமணியர், சிவம், சிவகாமசுந்தரி, விஷ்ணு இம்மூர்த்திகளி னர்ச்சனைக் குரிய அஷ்டோத்திரமும், முருகேசர் பதிகமும் அடங்கியிருக்கிறது. 0 3 0 திரியோதனன்சோகம் நாவல்ஸ் 0 4 0
கற்புக்கரசியென்னும் வெகு விநோத விரத பூஷனி டிராமா 0 5 0
வள்ளி சுயவரம் யென்னும் டிராமாசரித்திரம் 0 3 0
அண்ணாமலைரெட்டியார் காவடிச்சிந்து 0 2 0
சீலிக்கதை 0 4 0 பண்டரி கீர்த்தனை 0 4 0
ஆறுபாவை ஒக்கபிலேரி 0 4 0
உலிக்குத் தாலிகட்டினகதை 0 4 0
ஏகாதசி மகாத்மியம் என்கிற உருக்மாங்கத சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு 0 4 0
சீகாளத்திபுராணம்—வசனம், காளத்திக்ஷேத்திரத்தில் பக்தி முக்தியடைந்தவரின் சரித்திரங்களின் ஐதீக படங்களுடன் உண்டு 0 6 0
திருவேரகம் சாமிநாதசுவாமி காவடி நொண்டிச்சிந்தும், மாரியம்மன் காவடி நொண்டிச்சிந்தும் உள்ளது 0 1 0
மாசிலாமணி உபாத்தியாயரியற்றிய திருத்தொண்டநாடகம் 0 8 0
வல்லாளமகாராஜன் திருப்புகழ் காவடிச்சிந்து 0 2 0
மாம்பழக்கும்மி 0 1 0
பிரகலாத சரித்திர டிராமா 0 5 0
ஸ்ரீசௌளராஜப் பெருமாள்பேரில் பக்திரஸ் அருள்வாக்கு 0 4 0
ஸ்ரீகண்ணபிரான் பஜனைகீர்த்தனை 0 2 0

இன்னும் தங்களுக்கு தேவையாய் இருக்கும் புஸ்தகங்களை விபரமாய் எழுதினால் உடனே அனுப்பப்படும்.

புதிதாய் அச்சிடும் நூதன புத்தகங்கள்.

நல்லதங்காள் சரித்திரம் (நாடகத்திற் குரியது)	0	3	0
கோவிலன் சரித்திரம் முதல்பாகம்	0	3	0
ஷை இரண்டாம்பாகம்	0	3	0
அல்லி அர்ஜுனு சரித்திரம்	0	3	0
புதியபார்ஸீ சதாரம்சரித்திரம்	0	3	0
சுலோசனுசரித்திரம் (ராமாயணத்தில் இந்த்ரஜித்துவதம்)	0	2	0
* பார்ஸீ நூதன சிராளன்சரித்திரம் 1-ம்பாகம் 0-3-0 2-ம்பாக	0	3	0
தேவரகசியமென்னும் தாராசசாங்கவிஜயம்	0	3	0
புஷ்பலீலாவதி என்னும் குலேபகாவலிசரித்திரம்	0	3	0
பார்ஸீ லலிதாங்கிசரித்திரம்	0	3	0
* பாதுகா பட்டாபிஷேகசரித்திரம்	0	4	0
* சீதாபஹரணம் சரித்திரம்	0	5	0
* வைகுந்ததாசன், கைலாசநாதர், முருகக்கடவுள் பஜனைகீர்த்தனை, இதில்இந்துஸ்தான், பார்ஸீ, தில்லானு, டோப்ரி, திருப்புகழ், காவடிச்சிந்து, தேவாரம் முதலான வர்ணமெட்டுகளால் இயற்றியது	0	6	0
கபீர்தாசர்சரித்திரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு	0	4	0
மஹா பக்தவிஜயத்தில் ஓர்பாகம் மதிவல்லபமங்கை மோஹனுள் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு	0	3	0
ஜயதேவர்சரித்திரம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு மஹா பக்தவிஜயத்தில் ஓர்பாகம்	0	2	0
* கீசகசம்மாரம் டிராமா (விராடபர்வக் கதை)	0	4	0
* திருப்பதிபிரபாவம், திருப்புகழ்காவடிச்சிந்து வர்னமெட்டு	0	4	0
* ஹரிஹர பக்திரஸகீர்த்தனை, ராமாயண நொண்டிச்சிந்து	0	6	0
கருவூரார் அஷ்டமாசித்து மாந்திரீகம்	0	4	0
தலைவாங்கி அபூர்வசிந்தாமணிகாவல் (அருமையானகதை)	1	0	0
வெங்கடேசப்பெருமாள் தியானம் ஆண்டிப்பண்டாரப்பெட்டு	0	1	0
ஸ்ரீமகாவிஷ்ணு தசாவதாரக்கீர்த்தனைகள், திருப்புகழ் காவடிச்சிந்து வர்னமெட்டு	0	2	0
அகல்யா சாபவிமோசனம் திருப்புகழ்காவடிச்சிந்துவர்னமெ	0	4	0
சாதகசிந்தாமணி (திக்குகடிதம்)	1	8	0
ஷை காலிகோபயிண்டு (திக்குகடிதம்)	2	0	0
சோதிட கிரகசிந்தாமணிஎன்னும் பெரியவருஷாதிநூல் (திக்குகடிதம்)	1	0	0
ஷை காலிகோபயிண்டு (கிளேஸ்கடிதம்)	1	4	0
திருப்பதி வேங்கடேசுவரர் தேர்வண்டிக்கால் சரித்திரக்கீர்த்தனை	0	8	0

ஸ்ரீ வேணுகோபால நாமசங்கீர்த்தனம்	0	6	0
அம்பரீஷ சரித்திரக்கீர்த்தனை	0	6	0
சீதாகல்யாண சரித்திரக்கீர்த்தனை	0	6	0
துருவ சரித்திரக்கீர்த்தனை	0	6	0
சுபத்திரைக் கலியாண சரித்திரக்கீர்த்தனை	0	6	0
ருக்குமாங்கத சரித்திரக்கீர்த்தனை	0	6	0
சிறுத்தொண்டநாயனார் சரித்திரக்கீர்த்தனையும், சீலவதி சரித்திரக்கீர்த்தனையும்	0	6	0
ராஸக்ரீடை	0	6	0

உ

சிவமயம்.

விளம்பரம்.

வித்தியாப்பியாசிகளுக்கு தெரிவிப்பது யாதெனில்:—

எமது புத்தகசாலையில் அநேகவித சரித்திரங்கள், திருப்புகழ், காவடிச்சிந்து வர்ணமெட்டுகளில் எழுதி அச்சிட்டிருக்கிறோம் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசதாரருக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகங்கள் தேவையானவர்கள் வேண்டிய புத்தகங்களின் விலைக்குத்தகுந்த போஸ்டு பில்லைகள் வாங்கி கவரில் வைத்து அனுப்பினால் உடனே நீர்கோரிய புஸ்தகத்தை அனுப்புவோம். தபால் பில்லைகள் அனுப்பாமல் அனுப்பச்சொல்லி எழுதினால் நாங்கள் அனுப்ப வி. பி. சார்ஜி 1-புத்தகத்திற்கு 5-அணா வரும். அதனால் மேற்சொன்னபடி தபால்பில்லைகள் அனுப்பினால் நாங்கள் புக்பெட் போஸ்டாக அனுப்புவோம். நீங்கள் அவ்விடத்தில் 1-அணா கொடுத்து வாங்கிக்கொள்ளவும். அப்படி அனுப்பினால் புத்தகம் உங்களுக்கு பத்திரமாகச்சேரும், உங்களுடைய அட்ரஸ் விபரமாய் எழுதவும்.

இப்படிக்கு,

வி. ஆறுமுக முதலியார்,
4-வது நெய்பர் 2-வது சந்து,
பெருமாள்கோவில் தோட்டம்,
மதராஸ்.